2011 ஜனவரி 11]

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், இந்த subject-ல் பேசுகிறீர்களா? (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் சொல்லியாயிற்று. இனிமேல் இந்த subject-ஐ யாரும் open செய்யக்கூடாது. (குறுக்கீடுகள்) திரு. வேல்முருகன், நீங்கள் சொல்லுங்கள், என்ன? (குறுக்கீடுகள்) முதலமைச்சர் சொல்லிவிட்டார்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) போதும், இதைவிட வேறு உங்களுக்கு என்ன வேண்டும்? உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

3. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. வேல்முருகன், சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் 2 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த கோயில். அந்தக் கோயில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இந்து சமய அறநிலையத் துறையின் நடவடிக்கையின் பேரில், ஆண்டுக்கு 9 கோடி ரூபாய் வருமானம் வந்த அந்தக் கோயில், ஆண்டுக்கு இன்றைக்கு 25 கோடி ரூபாய் வருமானம் ஈட்டக்கூடிய ஒரு கோயில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், நீங்கள் இன்று காலையில்தான் இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். இதை அமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துக்கொண்டுபோய் அவர் அதைப்பற்றிய விவரங்களைச் சேகரித்து உங்களுக்குப் பதில் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.